36. எந்த வைரஸ் முதுகுப்புற நரம்பு முடிச்சில் பெருகி தண்டுவடத்தின் வழியாக மூளைக்கு பயணிக்கிறது?

(1) வாரிசெல்லா ஜோஸ்டர் (2) ரேபிஸ்

(3) ஹைட்ரோ ஃ போசியா (4) சால்மோனெல்லா டைபி

37. கீழ்க்காணும் கூற்றை ஆராய்க

**கூற்று**: சின்னம்மை ஒரு வைரஸ் தொற்று நோயாகும்.

**காரணம்**: உடல் முழுவதும் தடிப்புகள், காய்ச்சல் மற்றும் அம்மை கொப்பளங்கள் போன்ற அறிகுறிகளை கிருமிகள் தோற்றுவிக்கின்றன

(1) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(3) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(4) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

38. நாம் உணவில் இரும்புச் சத்தைப் பெற _______ சேர்க்க வேண்டியதில்லை.

(1) மீன் எண்ணெய் மாத்திரைகள் (2) முருங்கைக்கீரை

(3) பீன்ஸ் (4) பால்

39. **சரியா? தவறா?**

a. சிறிய தீக்காயங்களைப் பொருத்தவரை பாதிக்கப்பட்ட பகுதியை குளிர்ந்த நீரில் கழுவி கிருமிநாசினி களிம்பை தடவ வேண்டும்

b. கடுமையான தீக்காயங்களுக்கு குளிர்ந்த நீரில் கழுவி மெல்லிய துணியால் சுற்றி மருத்துவரை அணுக வேண்டும்

(1) a சரி, b தவறு (2) a தவறு, b சரி (3) a சரி, b சரி (4) a தவறு, b தவறு

40. வெக்டார்கள் என்பது _______.

(1) நீர் (2) காற்று (3) பூச்சிகள் (4) உணவு

41. டைபாய்டு : பாக்டீரியா : : ஹெபாடைட்டிஸ் : _______.

(1) வைரஸ் (2) மஞ்சள் காமாலை (3) உயிர்க் கொல்லி (4) தொற்று நோய்

42. _______ செய்யும்போது உணவுத் துகள், பற்காரை மற்றும் பாக்டீரியாக்கள் நீக்கப்படுகின்றன.

(1) ஃப்ளோசிங் (2) மாஸ்டிகேசன் (3) சுத்தம் செய்தல் (4) கறையை நீக்குதல்

LIVEWORKSHEETS

43. வண்ணக் குருட்டுத் தன்மை நோய்க்கு காரணம் ______.

(1) தூக்கமின்மை (2) வைட்டமின் - A

(3) கண்ணில் காயம் ஏற்படுதல் (4) மரபணு நிலை

44. மருந்துகளின் இராணி என அழைக்கப்படுவது ______.

(1) பெனிசிலின் (2) அமாக்ஸிலின்

(3) ஸ்ட்ரெப்டோமைசின் (4) கிளான்டோமைசின்

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

45. வைட்டமின் சி இதில் அதிகமாக உள்ளது. [NMMS-2016]

(1) பேரிச்சை (2) உருளைக்கிழங்கு

(3) முளைக்கட்டிய பயிறு வகைகள் (4) கேரட்

46. ஈறுகளில் இரத்தக் கசிவுக்கு தீர்வு காண ______ உண்ண வேண்டும். (NMMS - 2020 - 21)

(1) ஆப்பிள் (2) மாம்பழம் (3) பலாப்பழம் (4) சிட்ரஸ் பழங்கள்

LIVEWORKSHEETS